# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க,
# மின்சார (திருத்த)ச் சட்டம்

---

*[1984, ஏப்ரில் மாதம் 24 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1984, ஏப்ரில் மாதம் 27 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 60 தபாற் செலவு : சதம் 60

**1984 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க,-மின்சார (திருத்த) ச் சட்டம்**

[1984 ஏப்ரில் மாதம் 14 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.-ஓ 40/83 / 1582

**மின்சாரச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டமானது, 1984 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, மின்சார (திருத்த)ச் சட்டமென எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மின்சாரசட்டத்தின் 65 ஆம் பிரிவு, "ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத" என்பது தொடங்கி "தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்; " என்பது வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— 205 ஆம் அத்தியாயத்தின் 65 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதவான் நீதிமன்றத்தின் முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான ஒரு குற்றப்பணத்திற்கு அல்லது ஓராண்டுக்கு மேற்படாத இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய நீதிமன்றம், எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாகவுள்ளது எது எப்படி இருப்பினும், அத்தகைய தண்டனையை விதிப்பதற்கு இத்தால் தத்துவம் அளிக்கப்பட்டுள்ளது ; ".

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவு "ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத" என்பது தொடங்கி "தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்" என்பது வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:— முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவான் நீதிமன்றத்தின் முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல் ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான ஒரு குற்றப்பணத்துக்கு அல்லது ஓராண்டுக்கு மேற்படாத இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய நீதிமன்றம், எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாகவுள்ளது எது எப்படியிருப்பினும், அத்தகைய தண்டனையை விதிப்பதற்கு இத்தால் தத்துவமளிக்கப்பட்டுள்ளது.".

ஏ 075758—2,650 (03/84)

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 67 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 67 ஆம் பிரிவு "ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத" என்பது தொடங்கி "தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்." என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவான் நீதிமன்றத்தின் முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல் ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான ஒரு குற்றப்பணத்துக்கு அல்லது ஓராண்டுக்கு மேற்படாத இருவகையிலொருவகையான மறியற் றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற் றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய நீதிமன்றம் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாகவுள்ளது எது எப்படியிருப்பினும், அத்தகைய தண்டனையை விதிப்பதற்கு இத்தால் தத்துவமளிக்கப்பட்டுள்ளது. ".

முதன்மைச்சட்ட வாக்கத்தில் 67அ, 67ஆ, 67இ ஆகிய புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**5.** அறுபத்தேழாம் பிரிவை நேரே உடனடுத்து பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன ; அத்துடன் அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 67அ, 67ஆ, 67இ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"65, 66 அல்லது 67 ஆம் பிரிவுகளின்கீழான தவறுகளுக்கு உடந்தையளித்தல் தவறாகும்.

67அ. அறுபத்தைந்தாம் பிரிவின் கீழ் அல்லது 66 ஆம் பிரிவின்கீழ் அல்லது 67 ஆம் பிரிவின்கீழ் தண்டிக்கப்படற்பாலதான ஏதேனும் தவறைப்புரிவதற்கு உடந்தையளிக்கின்ற ஆள் எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் அவற்றில் ஏற்பாடுசெய்யப்பட்ட தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

இப்பிரிவில் "உடந்தை" என்பது தண்டனைச் சட்டக்கோவையின் 100 ஆம் பிரிவிலும் 101ஆம் பிரிவிலும் உள்ள அதே பொருளையே கொண்டிருத்தல் வேண்டும்.

65, 66 அல்லது 67 ஆம் பிரிவுகளின் கீழானதவறு ஒவ்வொன்றும் பிடியாணையின்றிக் கைது செய்தகு தவறாகவும் பிணையில் விடப்பட முடியாத தவறாகவும் இருத்தல்.

67ஆ. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் முரணாகவுள்ளது எது எப்படியிருப்பினும், 65 ஆம் பிரிவின்கீழான, 66 ஆம் பிரிவின்கீழான அல்லது 67 ஆம் பிரிவின் கீழான தவறு ஒவ்வொன்றும், அச்சட்டத்தின் பொருளுக்குட்படவும் நோக்கங்களுக்காகவும்—

(அ) பிடியாணையின்றிக் கைது செய்தகு தவறாகவும் ;

(ஆ) பிணையில் விடப்பட முடியாத தவறாகவும்

இருத்தல் வேண்டும்.

65, 66 அல்லது 67 ஆம் பிரிவுகளின் கீழான தவறு ஒவ்வொன்றுக்கும் மேலதிக குற்றப்பணம் விதிக்கப்படுதலும், உரிமம் பெற்றவரிடமிருந்து பெறப்படும் சான்றிதழ் முரணான எண்பிப்பு இல்லாதபோது நட்டம் பற்றிய அல்லது சேதம் பற்றிய எண்பிப்பாதலும்.

67இ. (1) எவரேனும் ஆள் 65 ஆம் பிரிவின் கீழ், 66 ஆம் பிரிவின்கீழ் அல்லது 67 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் தவறுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டவிடத்து, நீதிவான் நீதிமன்றமானது இச்சட்டத்தின்கீழ் விதிக்க வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் தண்டத்துடன் மேலதிகமாக, அத்தகைய தவறாக அமையும் செயலின் அல்லது தவறுகையின் விளைவாக உரிமம் பெற்றவருக்கு விளைவிக்கப்பட்ட நட்டத்தின் அல்லது சேதத்தின் பெறுமதியாக இருக்கும் பணத்தொகையிலான குற்றப்பணத்தை அத்தகைய ஆள் மீது விதித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய மேலதிக குற்றப்பணமாக அறவிடப்பட்ட ஏதேனும் பணத்தொகை அத்தகைய உரிமம் பெற்றவரினால் நீதிமன்றத்துக்குச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது உரிமம் பெற்றவருக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்

(2) முதல்வராகவோ உடந்தையாளராகவோ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் ஒரே தவறைப் புரிந்துள்ளதாகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவிடத்து அத்தகைய சேதத்தின் அல்லது நட்டத்தின் பெறுமதி அத்தகைய ஆட்களிடையே பங்கிடப்படலாம் என்பதுடன் அவ்வாறு பங்கிடப்பட்ட தொகை அத்தகைய ஆட்களுள் ஒவ்வொருவர் மீதும் குற்றப்பணமொன்றென்றுற்போன்று விதிக்கப்படுதலும் வேண்டும்.

(3) முரணான எண்பிப்பு இல்லாத பட்சத்தில் உரிமம் பெற்றவரால் வழங்கப்பட்ட சான்றிதழ் அத்தகைய நட்டத்தின் அல்லது சேதத்தின் பெறுமதிபற்றிய எண்பிப்பாகப் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.'.